**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24- ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

O.S. NO. 40/2018

**வா.சா.2**

**திரு. சுப்பையகவுண்டர்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை ( 1, 7, 8 பிரதிவாதிகள் தரப்பில்)**

நான் 6ம் வகுப்பு படித்துள்ளேன். விவசாயம் செய்து வருகிறேன். நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க சம்மன் எதுவும் வரவில்லை. 3ம் வாதி அழைத்ததன் பேரில் சாட்சிமளிக்க வந்துள்ளேன். வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அம்மாசையம்மாள், தங்காயாள், மற்றும் சிலர் தாக்கல் செய்துள்ளார்கள். வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அவர்களுக்கு இடையே உள்ள பிரச்சனை குறித்து நாங்கள் பைசல் பேசினோம். என் வீடு நம்பியூர் பொலவபாளையத்தில் உள்ளது. சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது பொலவபாளையம் கிராமத்தில் உள்ளது. சொத்தின் செக்குபந்தி தெரியுமா என்றால் ரங்கசாமியின் சொத்து மேபுறமும், கருப்பகவுண்டர் சொத்து கிழபுறமும், தென்புறம் புளியம்பட்டி ரோடு உள்ளது. வடபுறம் கருப்பகவுண்டர் பூமி உள்ளது. கருப்பணகவுண்டருடன் பிறந்தவர்கள் யார் யார் என்று எனக்கு தெரியும். வாய்மொழியாக யார் யார் சேர்ந்து பாகப்பிரிவினை செய்துகொடுத்தோம் என்றால்

நானும்,  முத்துசாமி, ரங்கசாமி, விஸ்வநாதன், மற்றொருவர் பெயர் தற்போது எனக்கு நினைவில்லை.     சார்பு நீதிமன்றத்தில் மற்றொரு வழக்கு உள்ளது அதில் நான் சாட்சியமளித்துள்ளேனா என்றால் இல்லை.    நான் சொல்வது போல் வாய்மொழி பாகபிரிவினை எதுவும் நடைபெறவில்லை என்றும், வாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பாகப்பிரிவினை செய்துகொண்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.